## இப்பாகமுவ பிரதேச சபை
## குருநாகல் மாவட்டம்

---

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 ஏப்ரல் 18 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 31 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 செப்தம்பர் 07 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் இப்பாகமுவ பிரதேச சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) இயந்திரங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களாக கணக்கு செய்யப்பட வேண்டிய ரூபா 42,577,845 ஆன 02 இயந்திரங்களின் பெறுமதி, மோட்டார் வாகனங்கள் மற்றும் வண்டிகளின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டில் காணி துண்டுகள் தொடர்பான தகவல்களின் பிரகாரம் சபைக்கு உறுதி மூலம் கையளிக்கப்பட்டுள்ள ரூபா 10,190,000 பெறுமதியான காணி நிலையான சொத்துக்களாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) உள்ளுராட்சி ஓய்வுதிய நிதியத்திற்கு செலுத்த வேண்டிய மீளாய்வாண்டின் பங்களிப்பு தொகையான ரூபா 112,861 இதனால் ஆண்டின் செலவினமாக கணக்கீடு செய்யாமை காரணமாக செலவினம் அத் தொகையால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் போது முன்னைய ஆண்டின் மூன்றாம் நான்காம் காலாண்டிற்காக உள்நாட்டு கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திற்கு செலுத்திய ரூபா 173,933 ஆன வட்டி மற்றும் ரூபா 526,436 ஆன கடன் தவணை, நன்கொடை தொகை, பங்களிப்பு தொகை என்பன நிவாரணச் செலவினத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டதன் பேரில் ஆண்டின் செலவினம் ரூபா 700,369 ஆலும் நீண்டகால பொறுப்புக்கள் ரூபா 526,436 ஆலும் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தன.

(உ) மீளாய்வாண்டின் 03 ஆம் காலாண்டிற்காக உள்நாட்டு கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திற்கு செலுத்திய ரூபா 467,760 வட்டித் தொகை கடன் மற்றும் அபிவிருத்தி நிதிய கடன் கணக்கிற்கு வரவு வைத்ததன் பேரில் ஆண்டின் செலவினம் மற்றும் கடன்கொடுத்தோர் அத்தொகையால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தன.

(ஊ) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட ரூபா 1,637,165 ஆன நீதிமன்றத் தண்டப் பண மீதிக்கு 2014 ஆம் ஆண்டிற்கு மீளாய்வாண்டில் கிடைத்த ரூபா 2,025,174 ஆன நிலுவை நீதிமன்ற தண்டப்பணத் தொகை செலவு வைக்கப்பட்டமையால்

நிலுவை நீதிமன்ற தண்டப்பண மீதி ரூபா 388,009 ஆல் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது.

(எ) 2014 நவம்பர் 15 ஆந் திகதிய 25/2014 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட ஊழியர்களுக்காக மீளாய்வாண்டின் இறுதியில் கிடைக்க வேண்டிய ரூபா 8,387,131 ஆல் சம்பள மீளளிப்பு தொகை நிலுவை சம்பளமாக கணக்கீடு செய்யப்படாததன் பேரில் ஆண்டின் வருமானம் மற்றும் வருமானக் கடன்பட்டோர் அப் பெறுமானத்தினால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஏ) மீளாய்வாண்டின் கொடுத்த ஆதனவரி கழிவு ரூபா 57,140 தொகை செலவினக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட வேண்டிய போதிலும், அது 46 ஆம் இலக்க நாட்குறிப்பு மூலம் மூலதன ஈடுபாட்டு மானியத்தின் மூலம் பங்களிப்புக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டதன் பேரில் ஆண்டின் செலவினம் அப் பெறுமானத்தினால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஐ) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் ரூபா 1,806,106 தொகையான நானாவித கடன்பட்டோர் மீதிக்கு பதிலாக ரூபா 4,304,106 தொகை கொடுப்பனவாக கணக்கு வரவு வைக்கப்பட்ட காரணத்தினால் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட வேண்டிய கடன்கொடுத்தோர் மீதி ரூபா 2,498,000 ஆல் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஒ) மீளாய்வாண்டில் நன்கொடையாக கிடைத்த 21,299,179 பெறுமதியான வாகனத்தின் பெறுமதி மூலதன வருமானம் மற்றும் மூலதன செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஓ) மீளாய்வாண்டிற்குரிய ரூபா 11,286,212 தொகையான நிர்மாண கடன்பட்டோர் ரூபா 10,448,241 எனக் கணக்கீடு செய்யப்பட்டதன் பேரில் ஆண்டின் செலவினம் மற்றும் கடன்கொடுத்தோர் ரூபா 837,971 ஆல் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஔ) மீளாய்வாண்டில் நிலுவை குத்தகை வாடகை தவணைகளாக ஈடு செய்யப்பட்ட ரூபா 375,005 ஆன பாதுகாப்பு பிணை 78 ஆம் இலக்க நாட்குறிப்பு மூலம் திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டதன் பேரில் பாதுகாப்பு பிணை வைப்பு ரூபா 375,005 ஆல் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(க) மீளாய்வாண்டின் போது காணிகளை துண்டுகளாக பிரிப்பதற்குரிய பெறவேண்டிய ரூபா 897,966 தொகையான 1 சதவீத வரித் தொகை ரூபா 621,619 என கணக்கீடு செய்ததன் பேரில் வருமானம் மற்றும் கடன்பட்டோர் ரூபா 276,347 ஆல் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(கா) மீளாய்வாண்டில் வாடகை முற்பண கொடுப்பனவு தொகையாக கிடைத்த ரூபா 1,657,827 தொகை நானாவித வைப்புக்களாக காண்பிக்கப்பட்ட காரணத்தினால் ஆண்டின் வருமானம் அப்பெறுமதியால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(கி) 2014 ஆம் ஆண்டில் ரூபா 1,578,840 முற்கொடுப்பனவுத் தொகை ஒப்பந்த வைப்புக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

மீளாய்வாண்டின் இறுதியில் முற்பண மீதி மற்றும் அதற்கு ஒத்த தொடர்புடைய பதிவேடு இடையே ரூபா 45,236 ஆன இணக்கமின்மை காணப்பட்டது.

### 1.3.3 பெறவேண்டிய கணக்குகள்

(i) 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 53,509,450 ஆக காணப்பட்டதுடன் அவற்றில் ரூபா 5,695,162 தொகை 3 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் காணப்படும் மீதிகளாகும்.

(ii) பெற வேண்டிய கணக்கு மீதிகளில் நீண்ட காலமாக காணப்படும் தகவல் சமர்ப்பிக்கப்படாத ரூபா 4,379,757 தொகையான நிலுவை மீதியொன்றும் 2014 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 5,068,753 ஆன நிர்மாணக் கடன்பட்டோர் மீதியொன்றும் ரூபா 25,286,306 ஆன நிலுவை முத்திரைக் கட்டண மீதிகளும் காணப்பட்டன.

### 1.3.4 செலுத்த வேண்டிய கணக்குகள்

(i) 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 40,214,538 ஆக காணப்பட்டதுன் அவற்றில் ரூபா 697,905 ஆன மீதி 3 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் தீர்வு செய்யப்படாமல் காணப்படும் மீதிகளாகும்.

(ii) செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளில் காணப்படும் உள்ளூராட்சி மன்ற ஓய்வூதிய நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய ரூபா 4,658,738 ஆன மீதியும் 2014 ஆம் ஆண்டிலிருந்து வரும் செலுத்த வேண்டிய ரூபா 555,488 பெறுமதிசேர் வரி மீதியும், 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளுக்குரிய ரூபா 5,195,580 ஆன நிர்மாணக் கடன்கொடுத்தோர் மீதிகளும் காணப்பட்டன.

### 1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

ரூபா 3,086,417 தொகையான நானாவித வைப்புக்களுக்குரிய வைப்பு பதிவேடு/ துணைப் பதிவேடுகள் சமர்ப்பிக்கப்படாததன் காரணமாக அக்கணக்கு விடயங்கள் தொடர்பாக திருப்திகரமாக பரீட்சிக்க முடியாதிருந்தது.

## 02. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் செலவினத்தை விஞ்சிய மீண்டுவரும் வருமானம் ரூபா 9,220,563 ஆக காணப்பட்டதுடன், அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 8,965,427 ஆக காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 18,185,990 ஆன அதிகரிப்பொன்று ஒன்று காணப்பட்டது. இந்த நிதி விளைவிற்கு ரூபா 90,478,790 இற்கான மூலதன உதவி மற்றும் ரூபா 92,007,355 ஆன மூலதன செலவுகளை சீராக்கல் மேற்கொண்ட போது மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகள் ரூபா 7,691,998 ஆன மிகை ஒன்றாக மாறியுள்ளது.

## 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதிச் செயலாற்றுகை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரிய உள்ளவாறான வருமானம், செலவினம் மற்றும் உரிய முரண்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | | வருமானம் | | | | செலவினம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | 2015 | 2014 | முரண் | செலவின விடயம் | 2015 | 2014 | முரண் |
| | | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| (i) | உழைத்த வருமானம் | 24,841 | 17,673 | 7,168 | தனிப்பட்ட வேதனம் | 70,356 | 52,762 | 17,594 |
| (ii) | ஏனையவை | 95,983 | 60,990 | 34,993 | ஏனையவை | 41,247 | 34,867 | 6,380 |
| | உப மொத்தம் | 120,824 | 78,663 | 42,161 | உப மொத்தம் | 111,603 | 87,629 | 23,974 |
| (iii) | மூலதன வருமானம் | 90,478 | 27,617 | 62,861 | மூலதன செலவினம் | 92,007 | 10,550 | 81,457 |
| | மொத்தம் | 211,302 | 106,280 | 105,022 | மொத்தம் | 203,610 | 98,179 | 105,431 |
| | நிதி விளைவு | 9,221 | (8,965) | 18,186 | மிகை / பற்றாக்குறை | 7,692 | 8,101 | (409) |

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்கான சபையின் மொத்த மீண்டுவரும் வருமானமாகிய ரூபா 120,824.008 தொகையில் 79 சதவீதம் அதாவது ரூபா 95,982,383 தொகை சபையினால் உருவாக்கிய வருமானம் அல்லாத நீதிமன்றத் தண்டப் பணம், முத்திரைக் கட்டணம், சம்பள மீளளிப்பு போன்ற படிகள் தன்மையுள்ள பெறுவனவுகளினை கொண்டுள்ளது. அதே போல் மூலதன வருமானமாகிய ரூபா 90,478,790 ஆன மொத்தத் தொகையும் வேறு நிறுவனங்களின் மூலம் அதிகாரப் பிரதேசத்தில் அபிவிருத்தி விடயங்களுக்கு கிடைக்கப்பெற்ற பணமாகும்.

(ஆ) மீளாய்வாண்டிற்குரிய மொத்த மீண்டுவரும் செலவினமாகிய ரூபா 111,603,445 தொகையில் 63 சதவீதமான அதாவது ரூபா 70,355,855 தொகை தனிப்பட்ட சம்பளத்திற்காக செலவினமாக இருந்ததுடன், அவற்றில் அண்மித்த 81 சதவீதமான அதாவது ரூபா 57,152,519 தொகை சம்பள மீளளிப்பாக உள்ளூராட்சி ஆணையாளரினால் வழங்கப்பட்டிருந்தது. அப் பெறுமதி ஏனைய மானியங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) அவ்வாறே மூலதனச் செலவினமான ரூபா 92,007,354 தொகையில் 19 சதவீதமாக ரூபா 17,714,815 தொகை சபை நிதியத்தில் இருந்து செலவிடப்பட்டிருந்ததுடன் எஞ்சிய 81 சதவீதமான ரூபா 74,292,539 தொகை 100 நாள் நிகழ்ச்சித்திட்டம், மாகாண கைத்தொழில், மாகாண முதலீடு போன்ற மூலங்களின் மீது வேறு நிறுவனங்களின் ஏற்பாடுகளின் மூலம் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி விடயங்களை அடக்கியுள்ளது.

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானமும் உள்ளபடியான வருமானமும்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரிய மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளவாறான வருமானம், செலவினம் மற்றும் நிலுவை வருமானம் என்பன கீழே காட்டப்பட்டுள்ளன.

| | | 2015 | | | 2014 | | |
|---|---|---|---|---|---|---|---|
| | வருமான விடயம் | மதிப்பிடப் பட்டது | உள்ளவாறான | திசெம்பர் 31 இல் உள்ளவாறு திரட்டிய பற்றாக்குறை | மதிப்பிடப்பட்டது | உள்ளவா றான | திசெம்பர் 31 இல் உள்ளாறு திரட்டிய பற்றாக்குறை |
| | | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| (i) | வீதவரியும் வரியும் | 4,500 | 6,005 | 5,218 | 3,000 | 3,244 | 4,514 |
| (ii) | குத்தகை வாடகை | 10,000 | 10,101 | 4,819 | 7,500 | 8,361 | 3,875 |
| (iii) | அனுமதிப்பத்திர கட்டணங்கள் | 91,231 | 102,725 | 26,876 | 65,201 | 65,240 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 51,389 | 56,255 | 4,866 | 46,932 | 38,490 | 24,339 |
| | மொத்தம் | 107,781 | 120,824 | 36,913 | 77,101 | 78,663 | 32,728 |

### 2.3.2 பட்டியலிடப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| வருமான விடயம் | 2015/01/01 இல் நிலுவை | ஆண்டில் பட்டியலிட்டது | மொத்தம் | 2015/01/01 இல் நிலுவை | வருமான சேகரிப்பு பட்டியிலிடப்பட்ட வருமானத்தில் சேகரித்த வருமானம் | மொத்தம் | 2015/01/01 இல் நிலுவை | நிலுவை மீதி பட்டியிலிடப்பட்ட வருமானத்தில் சேகரித்த வருமானம் | 2015/12/01 இல் நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 |
| வீதவரி மற்றும் வரி | 4,514 | 6,005 | 10,519 | 1,078 | 4,223 | 5,301 | 3,436 | 1,782 | 5,218 |
| வாடகை | 3,875 | 10,100 | 13,975 | 132 | 9,024 | 9,156 | 3,743 | 1,076 | 4,819 |
| அனுமதிப்பத்திர கட்டணங்கள் | - | 1,992 | 1,992 | - | 1,992 | 1,992 | - | - | - |
| *ஏனைய வருமானம் | 24,339 | 102,723 | 127,062 | 24,658* | 75,847 | 100,505 | - | 26,876 | 26,876* |
| மொத்தம் | 32,728 | 120,820 | 153,548 | 25,868 | 91,086 | 116,954 | 7,179 | 29,734 | 36,913 |

* நீதிமன்றத் தண்டப்பணம் 2015 சனவரி 01 இல் நிலுவையான மீதி குறைத்துக் கணக்கீடு செய்தமையால் ரூபா 319,000 தொகை மீளாய்வாண்டில் கூடுதலாக கிடைத்துள்ளது.

### 2.3.3 வாடகை

ரூபா 8,565,263 தொகை பெறுமதியான மெல்சிரிபுர பஸ் நிலையத்தின் 07 கடைகள் ரூபா 8,566,859 முற்கொடுப்பனவு தொகைக்கு (கீமணி) முறைமையில் வழங்கப்பட்டிருந்ததுடன், அது தொடர்பாக பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) இதற்குரிய பொது கோவை முறையாக பராமரிக்கப்படாதிருந்ததுடன் கடைகள் வழங்கப்பட்ட அடிப்படை, பணம் செலுத்த வேண்டிய முறை மற்றும் அதற்குரிய ஏனைய போதிய தகவல்கள் கணக்காய்வின் போது இனங்காண முடியாமல் இருந்தது. அவ்வாறே ஒவ்வொரு கடைகளுக்காக புறம்பான கோவைகள் காணப்பட்ட போதிலும், போதியளவு தகவல்கள் கோவைகளில் கோவை செய்யப்படாதிருந்ததுடன் உரிய தரப்பினருடன் எவ்வித உடன்படிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கடைகள் இனங்காணப்படக் கூடிய வகையில் இலக்கமிடப்படாதிருந்ததுடன் கேள்வி மூலம் 07 கடைகளுக்காக பணம் அறவிடப்பட்டிருந்த போதிலும், கடைகள் குத்தகைக்கு எடுத்த குத்தகையாளர்கள் தொடர்பான தகவல்கள் சபையிடம் காணப்படவில்லை.

(இ) 2013 ஏப்ரல் 30 வரையான கேள்வி கோரல் நிபந்தனையின் பிரகாரம் கேள்வித் தொகையில் 50 சதவீதம் 14 நாட்களுக்குள்ளும் எஞ்சிய 50 சதவீதம் 06 மாதங்களுக்குள்ளும் தவணையாக செலுத்தப்பட வேண்டிய போதிலும், முற்கொடுப்பனவு தொகையாக சபைக்கு அறவிடப்பட வேண்டிய ரூபா 5,330,191 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மேற்படி கடைகளுக்கு மேலதிகமாக மெல்சிரிபுர பஸ் நிலையத்தில் 153 சதுர அடி அளவிலான 04 கடைகள் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் இக்கடைகள் பூர்த்தி செய்யப்பட்டு 15 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும், கடைகள் மதிப்பீடு செய்யப்பட்டு முற்கொடுப்பனவு முறை அல்லது வாடகைக்கு வழங்குவதற்கு சபையினால் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.4 குத்தகை வாடகை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 2011 ஆம் ஆண்டிலிருந்து 2015 ஆம் ஆண்டு வரை சொத்துக்களை குத்தகைக்கு வழங்குவதற்காக சமர்ப்பிக்கப்பட்ட ஆதனங்களின் அட்டவணைகளின் பிரகாரம் 2011 ஆம் ஆண்டிலிருந்து குத்தகைக்கு வழங்கப்படாத 05 ஆதனங்களும் 2012 ஆம் ஆண்டிலிருந்து குத்தகைக்கு வழங்கப்படாத 02 ஆதனங்களும் 2014 ஆம் ஆண்டிலிருந்து குத்தகைக்கு வழங்கப்படாத 02 ஆதனங்களும் காணப்பட்டன.

(ஆ) மீளாய்வாண்டிற்குரிய இறைச்சி மற்றும் மீன் விற்பனை நிலையங்களுக்காக அனுமதிப்பத்திரங்களை பெற்றுக்கொண்டிருந்த போதிலும், அச்சொத்துக்கள் சபையின் உரித்தை குத்தகையின் கீழ் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2015 சொத்துக்களை குத்தகைக்கு வழங்குவதற்குரிய 02 சொத்துக்களுக்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 340,299 ஆன நிலுவை தவணை மற்றும் அதற்குரிய ரூபா 34,029 ஆன தண்டப்பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3.5 அனுமதிப்பத்திரக் கட்டணங்கள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) தொலைத் தொடர்பு கோபுரங்களை நிர்மாணிப்பதற்காக அபிவிருத்தி அனுமதிப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டு நிர்மாணிக்கப்பட்ட பின் இணக்கச் சான்றிதழ்கள் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும், 2013 ஆம் ஆண்டிற்கு பின்னர் எவ்வித தொலைபேசிக் கம்பனியொன்றினாலும் இணக்கச் சான்றிதழ் பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்பம் செய்திருக்கவில்லை.

(ஆ) இலங்கை குடியரசின் 2009 ஏப்ரல் 17 ஆந் திகதிய 1597/8 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் ஸதாபிக்கப்பட்டிருந்த கோபுரங்களுக்குரிய உயரம் 5 - 20 மீற்றர் வரை ரூபா 20,000 உம் அதிகரிக்கும் ஒவ்வொரு மீற்றருக்கும் ரூபா 100 வீதமான அறவிடப்பட வேண்டிய கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே கோபுரங்களுக்காக வருடாந்தம் அறவிடப்பட வேண்டிய வியாபார வரி அறவிடலோ அல்லது வியாபார அனுமதிப்பத்திரம் வழங்கலோ இடம்பெற்றிருக்கவில்லை.

**2.3.6 விளம்பர அறிவித்தல் கட்டணங்கள்**

பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் கிராம உத்தியோகத்தர் பிரிவில் அறிவித்தல் பதாதைகள் மற்றும் பெனர் காட்சிப்படுத்தப்பட்டிருந்த போதிலும், 2014 நவம்பர் மாதம் 28 ஆந் திகதிய 1981 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் சுவரொன்று, பதாகையொன்று, புடவையோ அல்லது பொலித்தீன் பயன்படுத்தப்பட்டு மேற்கொள்ளப்படும் விளம்பர அறிவித்தல் ஒரு சதுர அடிக்காக ரூபா 50 வீதம் கட்டணங்கள் அறவிடப்பட வேண்டிய போதிலும், சபை அதிகாரப் பிரதேசத்தில் பொருத்தப்பட்டிருந்த 38 அறிவித்தல் பதாதைகள் இனங்காணப்பட்டிருந்த போதிலும், 12 பதாதைகளுக்காக மாத்திரம் கட்டணங்கள் அறவிடப்பட்டிருந்தது.

**2.3.7 நீதிமன்றத் தண்டப்பணமும் முத்திரைக் கட்டணமும்**

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்து மீளாய்வாண்டின் இறுதியில் கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணங்கள் ரூபா 802,877 ஆக இருந்ததுடன், கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணங்கள் ரூபா 25,286,306 ஆக இருந்தது.

**03. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 காணிகளை பகுதிகளாக விற்பனை செய்தல்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) சபை அதிகாரப் பிரதேசத்தில் 2013 ஆம் ஆண்டிலிருந்து 2015 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் இணை பிரிக்கப்பட்ட காணி பிரதேசத்திற்கு அறவிடப்பட்டிருந்த 1 சதவீத வரித் தொகை குறிப்பிடப்படாதிருந்ததுடன் 03 காணித் துண்டுகளுக்குரிய வரித் தொகையில் ஒரு பகுதி மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. அவ்வாறே 02 காணித் துண்டுகளுக்குரிய பொது வசதிகளுக்காக ஒதுக்கப்பட்டிருந்த காணியின் உறுதி இலக்கம் மற்றும் அளவு என்பன குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2003 நவம்பர் 28 ஆந் திகதிய 1317 ஆம் இலக்க மாகாண சபை வர்த்தமானி பத்திரத்தில் வீடுகள் ஆதனங்கள் அபிவிருத்தி மற்றும் காணி பகுதிகளாக்கல் தொடர்பான துணை விதியின் 10 ஆம் பந்தியின் (1) ஆம் பந்தியின் பிரகாரம் காணி துண்டுகளின் எண்ணிக்கை 20 இற்கு மேற்படும் போது வீதியின் அகலம் 09 மீற்றாக இருக்க வேண்டிய போதிலும் 20 மேற்பட்ட காணித்துண்டுகள் காணப்பட்ட போதிலும் வீதியின் அகலம் 06 மீற்றர் மாத்திரமாக இருந்த 12 திட்டங்கள் 2013 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை அங்கீகரிக்கப்பட்டிருந்தன.

(இ) 03 ஏக்கர் 02 ரூட் 5.7 பேர்ச் அளவிலான கிந்தபெள்ள வத்த காணியின் பொது பகுதிக்காக ஒதுக்கப்பட்ட பகுதியை இனங்காண முடியாதிருந்தது. வீதியின் அகலம் 06 மீற்றர் மாத்திரமாக இருந்ததுடன் வீதியின் இரண்டு பக்கங்களிலும் வடி காண் முறைமை இல்லாதிருந்தமையால் வீதிக்கு குறுக்கே நீர் வழிந்தோடுவது 2015 ஒக்தோபர் 22 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. மேலும் மின்சாரம் மற்றும் நீர் வசதிகள் வழங்கலும் இடம் பெற்றிருக்கவில்லை.

(ஈ) 2015 மார்ச் 02 ஆந் திகதி பகுதியாக்கல் திட்டம் அங்கீகரிக்கப்பட்டிருந்த பான்கொல்ல கொல்லன் பஹுவ தோட்டம் என்ற பெயரிலான காணி 49 துண்டுகளாக இருந்தன. பொது பகுதிக்காக 42 ஆம் இலக்க ஆண்டின் மூலம் 01 ரூட் 38.5 பேர்ச் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அதனை இனங்காணவோ அல்லது ஏனையவர்களின் பாவனையிலிருந்து தவிர்த்துக் கொள்வதற்கு குறிப்பான வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. 20 தென்னை மரங்கள் அங்கு காணப்பட்டதுடன் அதன் விளைச்சலை குத்தகைக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மின்சாரம் வழங்கப்படாதிருந்ததுடன், காணித் துண்டுகளுக்காக நீர்வசதிகள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.1 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

ஹிரிபிட்டிய உப அலுவலகத்திற்குரிய கபுஹேன வத்த என்ற பெயருடைய சபைக்குச் சொந்தமான 03 ஏக்கர் விசாலமான பொது காணி நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் குறிப்பிடப்படாதிருந்ததுடன் 2015 ஒக்தோபர் 22 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது காணியின் ஒரு பகுதி வெளித்தரப்பினரால் அனுமதியின்றி நிரந்தர பயிர் செய்கை மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அதற்காக சபை எவ்வித நடவடிக்கைகளும் எடுத்திருக்கவில்லை.

## 3.3 வாகனக் கட்டுப்பாடு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) இலங்கை ஜனநாயக குடியரசின் நிதிப்பிரமாணம் 1645(ஆ) மற்றும் (இ) பிரகாரம் முறையான மற்றும் நாளதுவரையாக நாளாந்த ஓட்டக் குறிப்புக்கள் பராமரிக்கப்பட வேண்டிய போதிலும் PD-1844 ஆம் இலக்க கெப் வண்டியின் நாளாந்த ஓட்டக் குறிப்புக்கள் 2012 செப்தெம்பர் 06 ஆந் திகதி முதல் 2015 ஒக்தோபர் 20 ஆந் திகதி வரையான கணக்காய்வு திகதி வரை எழுதப்பட்டிருக்கவில்லை. அக்காலப்பகுதிக்குரிய கெப் வண்டி ஓட்டத்தில் ஈடுபட்டிருந்த 149236 கி.மீ ஆக இருந்ததுடன் அதற்கான எரிபொருள் செலவினமாக ரூபா 2,928,855 தொகையும் பராமரிப்பு செலவினமாக ரூபா 461,565 தொகையுமாக மொத்தம் ரூபா 3,390,420 செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) இவ்வாகனத்திற்குரிய சாரதி 2012 நவம்பர் 01 முதல் 2015 மே 15 ஆந் திகதி வரை 2009 ஏப்ரல் 16 ஆந் திகதி பொது நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 09/2009 இன் பிரகாரம் கைவிரலடையால இயந்திரம் பயன்படுத்தப்பட்டோ அல்லது வருகை பதிவேட்டின் மூலமோ அவர் கடமைக்கு வருகை தந்திருந்தமை உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அத்தோடு ஓட்டக் குறிப்புகளும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அக்காலப்பகுதிக்குரிய சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 723,140 தொகையும் பிரயாண செலவினம் மற்றும் இணைந்த படியாக ரூபா 87,662 தொகையும் மேலதிக நேரப் படிகளாக ரூபா 89,250 உமாக ரூபா 900,052 தொகை அவரின் வருகை மற்றும் மேற்கொண்ட கடமைகள் என்பன உறுதிப்படுத்தாமல் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தன.

(இ) அலுவலகத்தின் உத்தியோகத்தரொருவர் முன்னிலையில் முறையான எரிபொருள் கட்டளையொன்று வழங்கி எரிபொருள் பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய போதிலும் சாரதியால் அவ்வாறான மேற்பார்வையொன்றும் அல்லது அங்கீகாரமொன்றும் இல்லாமல் அந்த வாகனத்திற்கு தனியார் எரிபொருள் நிரப்பும் நிலையமொன்றின் ஊடாக 2013 யூலை 13 முதல் 2013 செப்தெம்பர் 04 ஆந் திகதி வரை ரூபா 176,275 பெறுமதியான 1466 லீற்றர் எரிபொருள் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது.

பசுக்கள் கட்டுப்பாடு

---------------------------

(ஈ) உள்ளூராட்சி ஆணையாளரின் பாதீட்டு முன்மொழிவு - 2013 மாகாணத்தில் வறுமையை குறைக்கும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் வடமேல் மாகாண பசுக்கள் கட்டுப்பாடு பெயரிலான ஆலோசனைக் கடிதத்தின் பின்னிணைப்பு 02 இன் 01 ஆம் பிரிவின் பிரகாரம் பசுக்கன்று ஒன்றுக்காக 20 சதவீதம் நலனாளிகளின் பங்களிப்பு பெற்றுக்கொள்ளப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும் சபையினால் வழங்கப்பட்டிருந்த 05 பசுக் கன்றுகளுக்கு உரித்தாக பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய ரூபா 57,000 நலனாலி பங்களிப்பினை குறித்த நலனாலிகளிடமிருந்து பெற்றுக்கொள்ளாமல் கால்நடைகளுக்கான மொத்த செலவினமும் சபையினால் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் 03 நலனாளிகளிடமிருந்து மாத்திரம் 20 சதவீத பணம் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) சபையினால் ரூபா 55,000 முதல் ரூபா 100,000 வரையான பல்வேறு பெறுமதிகளில் பசுக்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் குறித்த பசுக்களை காப்புறுதி செய்யும் போது காப்புறுதி கம்பனியின் மதிப்பீடு ரூபா 25,000 முதல் ரூபா 65,000 வரையான வீச்சில் காணப்பட்டன. அதன் பிரகாரம் கால்நடைகளுக்காக செலுத்தப்பட்ட பெறுமதி தொடர்பாக கணக்காய்வின் போது சிக்கலானதொன்றாக இருந்தது. மேலும் இவ்வாறு கூடிய விலை கொடுத்து கொள்வனவு செய்யப்பட்ட மிருகங்களின் காப்புறுதி தொகை அதற்கு குறைந்த பெறுமானமாக இருந்தமையால் ரூபா 100,000 செலவிடப்பட்டு கொள்வனவு செய்யப்பட்ட (6130/0224/0069) ஆம் இலக்க பசு 2017 மார்ச் 27 ஆந் திகதி இறந்ததன் காரணமாக காப்புறுதி இழப்பீடாக ரூபா 62,000 மாத்திரம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

**3.4. ஒப்பந்த நிர்வாகம்**

-------------------------------

**3.4.1 வீதிகளில் குருணிக்கல் இடுதல்**

-------------------------------------------------------------

2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் பொது நிதியத்தை பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டிருந்த 225 நிர்மாண வேலைகளில் 198 அல்லது 88 சதவீதம் குருணிக் கல் இடுவதாக இருந்ததுடன் அதற்காக செலவிடப்பட்ட தொகை ரூபா 21,536,410 ஆக இருந்தது. மீளாய்வாண்டில் 05 வீதிகள் தொடர்பாக 2015 ஒக்தோபர் 23 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது இவ்வீதிகளில் குருணிக் கற்கள் கழுவிச் செல்லப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டன.

**3.4.2 நாபட்ட நீர் செயற்திட்டம்**

----------------------------------------------

2012 ஆம் ஆண்டில் வேலை ஆரம்பிக்கப்பட்டு தற்போது செயற்பாட்டு நிலையில் நாபட்ட நீர் செயற்திட்டத்திற்காக 2013 ஆம் ஆண்டில் நீரைச் சேகரிப்பதற்காக தாங்கியொன்றை அமைப்பதற்கு ரூபா 1,336,546 தொகை செலவிடப்பட்டிருந்தது. 2015 ஒக்தோபர் 23 கணக்காய்வு சந்தர்ப்பம் வரையிலும் உரிய நீர்த் தாங்கியின் கீழ் பகுதியில் நீர் கசிந்து கொண்டு காணப்பட்டது. 2014 ஆம் ஆண்டில் நாபட நீர் செயற்திட்டத்தின் எஞ்சிய வேலை பகுதிக்காக 2 ஆவது பகுதிக் கொடுப்பனவின் கீழ் 4 ஆம் உப இலக்கத்தின் மூலம் 4 அங்குல GI குழாய் வழங்கி பொருத்தவதற்காக ஒரு அடிக்கு 662 வீதம் 45 அடிக்காக ரூபா 29,790 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

**3.4.3 ஹிரிபிட்டிய உப அலுவலகத்தின் வாகனங்களை நிறுத்தி வைப்பதற்கான இடத்தை அமைத்தல்**

மேற்குறித்த நிர்மாணத்திற்குரிய அறிக்கையில் 03 ஆம் இலக்கத்தின் மூலம் 1:2:4(3/4)" கொங்கிரீட் சீமெந்து கலவையில் தூணியின் பாதத்திற்கு கொங்கிரீட் இடுவதற்காக 66 கியுப்களுக்காக ரூபா 22,874 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் பயன்படுத்தப்பட்ட கொங்கிரீட் தரமில்லாமல் இருந்தமையால் உடைந்து விழக் கூடியதாக இருந்தது. மேலும் கூரையின் GI தகரங்கள் சில கலன்று இருந்ததுடன் கூரையின் ஓரமும் நடுப்பகுதியும் கடும் காற்றினால் கிழிந்து தொங்கிக் கொண்டிருந்தன. பயன்படுத்தப்பட்டிருந்த தகரம் 34 கேஜ் ஆக இருந்ததுடன் தகரங்களின் தடிப்பு தொடர்பாக கொடுப்பனவு அறிக்கையொன்றோ மதிப்பீடொன்றோ குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. பயன்படுத்தப்பட்ட தென்னங் கம்புகள் மற்றும் ரீப்பைகளுக்கு மரப் பாதுகாப்பு பூச்சு இரண்டு முறை பூசப்படாதிருந்ததுடன், தகரம் கலன்றிருந்த இடங்களில் வெள்ளை நிறத்திலான பூஞ்சனம் ஒட்டியிருந்தது.

**3.5 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

2014 நவம்பர் 10 ஆந் திகதி உள்ளூராட்சி மன்ற மற்றும் மாகாண சபைகள் அமைச்சிடமிருந்து சபைக்கு கிடைத்த 600 GI குழாய்கள் தொடர்பாக 2015 ஒக்தோபர் 25 ஆந் திகதி பௌதீக பரிசோதனையின் போது 183 குழாய்கள் பற்றாக்குறையாக காணப்பட்டன.

**04. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்குரிய பாதீட்டின் பிரகாரம் 02 செலவின விடயங்களின் கீழ் மதிப்பிடப்பட்ட செலவினம் ரூபா 10,970,000 ஆக இருந்த போதிலும், உள்ளவாறான செலவினம் ரூபா 31,421,000 ஆக இருந்தமையால் ரூபா 20,451,000 ஆல் பாதீடு மிகைத்திருந்தது.

(ஆ) சபையினால் மீளாய்வாண்டில் நிறைவேற்றுவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த பாதீட்டின் மூலம் நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 200,000 பெறுமதியான 03 நலன்புரி செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**4.2 உள்ளகக் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**

மீளாய்வாண்டிற்குரிய கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்கள் நடாத்தப்படாதிருந்ததுடன் அதன் கீழான உள்ளகக் கணக்காய்வு பிரிவும் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**4.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

**(அ) விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

(அ) 2014 ஆம் ஆண்டில் ரூபா 31,500 செலவு செய்து சபையினால் கொள்வனவு செய்யப்பட்டிருந்த கலர் பிரின்டர் ஒன்று கொள்வனவு செய்த திகதி முதல் செயற்பாடுகளுக்கு பயன்படுத்தப்படாமல் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2012 ஆம் ஆண்டின் போது உள்ளூராட்சி மன்ற மற்றும் மாகாண சபைகள் அமைச்சிடமிருந்து சபைக்கு கிடைத்த 12 கூடாரங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் 2014 ஆம் ஆண்டில் இக்கூடாரங்களுக்காக புதிதாக கூடாரப் புடவைகள் கொள்வனவு செய்வதற்காக ரூபா 90,000 சபை நிதியத்திலிருந்து செலவிடப்பட்டிருந்தது. இக்கூடார புடவைகளும் அலுவலக வளவில் குவித்து வைக்கப்பட்டிருந்ததுடன் சிதைவடைந்து காணப்பட்டன.

## 04. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) வருமான நிருவாகம்
(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(உ) ஒப்பந்த நிருவாகம்